# மணலாறில் இராணுவ நடவடிக்கை முடிவடைந்தது

## அதிகாரி தகவல்

(கொழும்பு)
முல்லைத்தீவு மணலாறுப் பகுதியில் மேற்கொள்ளப்பட்டு வந்த இராணுவ நடவடிக்கை முடிவடைந்து விட்டதாக இராணுவ அதிகாரி ஒருவர் நேற்று தெரிவித்தார்.
அரசின் போர் நிறுத்த அறிவிப்புக் குறித்து வினவிய

(4-ம் பக்கம் பார்க்க)

விலை ரூபா 5-00

ஈழநாடு

THE EELANADU
NATIONAL TAMIL DAILY

மலர் 38 | திருவள்ளுவர் ஆண்டு 2022 | புரட்டாதி 14 | இதழ் 231
யாழ்ப்பாணம் | திங்கட்கிழமை | 30-9-1991

## தளர்வு எதுவுமில்லை!

(சென்னை)
இலங்கையின் வடக்கு-கிழக்குப் பகுதிகளில், இலங்கை அரசு மேற்கொள்ளும் இராணுவ நடவடிக்கைகளில் தளர்வு ஏதும் இல்லையென்று ஸ்ரீலங்கா அரசு திட்டவட்ட

(4-ம் பக்கம் பார்க்க)

## அம்பாறை மாவட்டத்தில் தேடுதல் வேட்டை

(மட்டக்களப்பு)
அம்பாறை மாவட்டத்தில் உள்ள கோமாரி, பொத்துவில் பகுதிகளில் நேற்று முன்தினம் விசேட அதிரடிப் பொலிஸ்

[4-ம் பக்கம் பார்க்க]

# வடக்கு கிழக்கில் நிரந்தர யுத்த நிறுத்தம்

# விரைவில் ஏற்பட வாய்ப்பு!

(கொழும்பு)
வடக்கு - கிழக்கு பகுதியில் விரைவில் நிரந்தர யுத்த நிறுத்தம் ஒன்று ஏற்படுவதற்கான வாய்ப்புக்கள் இருப்பதாக அரசியல் இராணுவ வட்டாரங்கள் மூலம் தெரியவந்துள்ளது. இதே வேளையில் வடக்கு - கிழக்கு நிலைமைகள் குறித்து பத்திரிகையாளர்களும் இதேகருத்தையே தெரிவித்துள்ளனர். இதன் மூலம் தற்போது இடைக்கால யுத்த நிறுத்தம் ஒன்று அமுலில் இருப்பது குறித்தும் அவர்கள் தமது கருத்துக்கள் மூலம் சுட்டிக் காட்டியிருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கையில் அரசு படையினருக்கும், விடுதலைப்புலிகளுக்கும் இடையில் நேற்றும் மூன்றாவது நாளாக மோதல் சம்பவம் எதுவும் இடம்பெறவில்லையென்று கொழும்பில் இராணுவ அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார். கடந்த வெள்ளிக்கிழமை வடக்கு-கிழக்குப் பகுதிகளில் இராணுவம் தமது தாக்குதல் நடவடிக்கையை இடைநிறுத்தியுள்ளதாக அறிவித்த நாளில் இருந்தே இரு தரப்புக்கும் இடையில் மோதல் சம்பவங்கள் எதுவும் இடம்பெறவில்லை.

இதேவேளை விடுதலைப்புலிக

[4ம் பக்கம் பார்க்க]

## திருமலைக்கான எம். பிக்கள் விரைவில் நியமனம்

(கொழும்பு)
திருமலை மாவட்ட சுயேட்சைக் குழுவின் (ஈரோஸ்) நாடாளுமன்ற உறுப்பினர்கள் இருவரும் புதிதாக நியமிக்கப்படவிருக்கிறார்கள்.
அத்துடன் யாழ். மாவட்டத்திற்கான இரண்டு ஈரோஸ் நாடாளுமன்ற உறுப்பினர்களும் நியமிக்கப்படவிருப்பதாக தெரிவிக்கப்படுகிறது.
ஈரோஸ் குழுவின் தேசியப் பட்டியல் மூலம் உறுப்பினர் ஒருவரும் வெகு விரைவில் நியமிக்கப்படவிருக்கிறார். (மா)

## யுத்தம் தொடருமென பாதுகாப்பு அமைச்சு தகவல்

(கொழும்பு)
வடக்கு- கிழக்குப் பகுதியில் யுத்தம் தடைகள் எதுவுமின்றி தொடர்ந்து நடைபெற்று வருமென்று பாதுகாப்பு அமைச்சு நேற்று தெரிவித்தது:
இதேவேளையில் வவுனியா மாவட்டத்தில் செட்டிக்குளம் பகுதியிலும், மன்னார் மாவட்டத்தில் மன்னார் தீவைத் தவிர்ந்த மற்றைய இடங்களில் அமுல் படுத்தப்பட்ட ஊரடங்கு உத்தரவு தொடர்ந்து அமுலில் இருக்கும் எனவும் பாதுகாப்பு அமைச்சு தெரிவித்தது:

### விமான தாக்குதல்

(மன்னார்)
மன்னார் மாவட்டத்தில் இலுப்பைக்கடவை, பண்டிவிரிச்சான், விடத்தல்தீவு போன்ற பகுதிகளில் நேற்றுக் காலை, ஸ்ரீலங்கா விமானப் படை விமானங்கள் நடத்திய குண்டு வீச்சுத் தாக்குதலில் பொதுமகன் ஒருவர் காயம் அடைந்ததாகவும், இரண்டு வீடுகள் சேதம் அடைந்ததாகவும் தெரிவிக்கப்படுகிறது. (க)

## பேச்சுவார்த்தைக்கு 3 நிபந்தனைகள்

(சென்னை)
இலங்கை இனப்பிரச்னைக்கான தீர்வு குறித்து இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் தலைவர் திரு. எஸ். தொண்டமா

(4-ம் பக்கம் பார்க்க)

## வர்த்தமானியில் பிரசுரம்

(கொழும்பு)
யாழ். மாவட்ட சுயேட்சைக் குழு (ஈரோஸ்) புதிய ஆறு எம். பிக்களின் பெயர்கள் அரசாங்க வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டுள்ளது. (மா)

## ஜனாதிபதிக்கு எதிரான விவகாரம்: தென்பகுதியில் சூடுபிடிக்கிறது!

(கொழும்பு)
ஜனாதிபதி திரு. ஆர். பிரேமதாசாவுக்கு எதிராக கொண்டு வரப்படவிருக்கும் அரசியல் குற்றச்சாட்டு பிரேரணை விவகாரம் தற்போது தென்னிலங்கையில் சூடுபிடித்திருக்கிறது.
பொது மக்கள் மத்தியில் இந்தப் பிரேரணை இப்போது மிகவும் பிரபல்யமாகி விட்டதாக தெரிவிக்கப்படுகிறது. வீதிகளில், கடைகளில், அலுவலகங்களில், ஏன் வீடுகளில்

(4-ம் பக்கம் பார்க்க)

## இலங்கை அரசியல் வரலாற்றில் சுவாரஸ்யமான நிகழ்வுகள் ஏற்படும்

(லண்டன்)
இலங்கையின் அரசியல் வரலாற்றில் அடுத்த வாரத்தில் சுவாரஸ்யமான சம்பவங்கள் இடம்பெறுமென எதிர்பார்க்கப்படுகிறது. ஜனாதிபதி மீதான குற்ற விசாரணைப் பிரேரணை விவகாரத்தில் சுயேட்சை (ஈரோஸ்) எம். பிக்கள் ஜனாதிபதிக்கு ஆதரவு தெரிவிப்பார்கள் என எதிர்பார்க்கப்படுவதாலேயே இந்த மாற்றம் ஏற்பட இருப்பதாகத் தெரிவிக்கப்பட்டிருக்கின்றது.

[4ம் பக்கம் பார்க்க]

## புலிகள் தாக்குதல்

(யாழ்ப்பாணம்)
வவுனியாவில் சமூக விரோதக் கும்பல் ஒன்றின் மீது விடுதலைப் புலிகள் நேற்று முன்தினம் அதிரடித் தாக்குதல்

(4-ம் பக்கம் பார்க்க)

## ஜனாதிபதிக்குப்பின் வந்த எம். பி.க்கள்

(கொழும்பு)
நாடாளுமன்றம் ஒத்திவைக்கப்பட்டு மீண்டும் கடந்த 24ம் திகதி கூடிய போது, ஜனாதிபதி நாடாளுமன்றத்திற்கு வந்த பின்னரே எதிர்க்கட்சி உறுப்பினர்கள் வந்தனராம்.
இவர்கள் தங்கள் இருக்கைகளை வெள்ளைத் துணிகளால் நன்கு தட்டிய பின்பே அமர்ந்தனர் என்று தெரிவிக்கப்பட்டது.
அழுக்குகளை அகற்றவே தாங்கள் போராடுவதாகக் காட்டவே இவ்வாறு இருக்கைகளை வெள்ளைத் துணியால் அவர்கள் நன்றாகத் துடைத்தார்களாம். (153)

## வரி விளம்பரம்

### நாடகங்கள்

ஆசிரியர் தினத்தில் நடிப்பதற்குப் பொருத்தமான பல நாடகங்களைக்கொண்ட நூல்கள் அராலியூர் ந. சுந்தரம்பிள்ளையின் கெட்டிக்காரர்கள் 25/-, முதலாம்பிள்ளை 30/- இலகுவாகப் பழகலாம்.

(சி 5416)

**வியாபாரம் பெருக விளம்பரம் செய்க**

## ஒருநாளில் நால்வருக்கு விசர்நாய்கடித்தது

(சாவகச்சேரி)

ஒரே குடும்பத்தைச்சேர்ந்த நால்வர் விசர்நாயொன்றினால் கடிபட்ட சம்பவம் கடந்த 24-ம் திகதி எழுதுமட்டுவாள் தெற்கில் இடம்பெற்றது.

இ. மரியதாஸ் (வயது 39) ம. மேரி (வயது 32), ம. சுசி (வயது 9), ம. மதி (வயது 8) ஆகியோரே காயமடைந்து வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றுள்ளனர்.


# வெளிநாட்டுத் தபால்களை இன்றே ஒப்படைப்பீர்
# துரிததபால் சேவைக்கு DHL

## DHL International

C/o Cosmos,
Marketing Services,
120, K. K. S. Road, Jaffna.

(எ 1547)


## கண்ணீர் நினைவஞ்சலி

### அமரர் திரு. நாகமுத்து மாணிக்க இடைக்காடர்

M. A. (Cantab) M. Sc. (Lond) F. S.S. (Lond)
Statistician of F. A. O. (of U.N.)


ஞாலமதில் நாகமுத்து புதல்வ நீ
இடைக்காடு கண்ட பேரசளன் ஐயா
ஞானமுடன் பண்பும் கூடவே
ஈகையுடன் செய்தொழில் மேன்மையும்
ஞானஒளி சிந்தப்பழகிடும் சாந்தன் நீ
ஈங்கு கல்விக்கோர் கலங்கரை விளக்கம் ஐயா
ஞானப் புதல்வ, இடைக்காடு கலைக்கோயில்தன்
ஈடிணைப் புகழுக்கோர் காப்பாளன்
ஞான்றும் நின்பிரிவால் நொந்து நின்றும் நீ
ஈசனடி சேர ஆத்ம சாந்திக்கு எம் அஞ்சலிகள்
ஐயா

அதிபர், ஆசிரியர், பணியாளர், மாணவர்.

யா/இடைக்காடு மகாவித்தியாலயம்
அச்சுவேலி.

(சி-5420)

## ஓராண்டு நினைவஞ்சலி



### சுப்பிரமணியம் ஜெயசந்திரன்

பிறப்பு: 10-08-1956
இறப்பு: 21-10-1990

திதி: 30-09-1991

அன்புள்ளம் கொண்ட அருமைப் பிறவி நீ
தன்னலமி கருதா தகைசேர் மைந்தனே
இன் சொல் கூறி எமையெல்லாம் மகிழ்விப்பாய்
இன்றுன் திருமுகத்தை எப்படி நாம் காண்பதையா

அன்னையையும் அருமை மனைவியையும் கைவிட்டு
உன்னை வளர்த்த உற்றாரை அழவைத்து
தன்னந் தனி மரமாய் தரணிவிட்டு மறைந்தாய்
என்ன செய்வோம் உன்னை இதயமதில் ஏற்றிவிட்டோம்

பிரிவால் துயருறும்:
மனைவி சச்சிகலா, அன்புத்தாய்,
அண்ணன், தம்பி, அக்காமார்.
அத்தான்மார், அண்ணிமார், மருமக்கள்,
பெருமக்கள், உற்றார், உறவினர், நண்பர்கள்.

எஸ். சிவராசா,
தணமன்கட்டி,
தெல்லிப்பழை.

(சி 5419)

# பற்றீஸியன் தொழிற் பயிற்சி நிறுவனம்

# Patrician Institutes

## தொழினுட்ப பயிற்சி நெறிகள் புதிய பிரிவுகள் ஆரம்பம்

(1) COMPUTER PROCESSING COURSES

(I) Computer Programming in Basic Language and disk Operating System (M. S. DOS)
Duration - 4 Months

(II) Word Processing and M. S. DOS (Word Star - 4000)
Duration - 3 Months

Commencing - 08-10-1991 (Week day classes)
Equipment used - LASER XT/2, XT/3, 386 and Bitcom. (I B M Compatibles)

Lectures by: S. R. Logendra D. C. A. (Systems analyst)

பின்வரும் பயிற்சி நெறிகள் எதிர்வரும் 07-10-1991 திங்கட்கிழமை காலை 9-00 மணிக்கு ஆரம்பமாகும்:

(2) CIVIL DRAUGHTSMANSHIP COURSE
Duration — 6 months

Course covers:
(1) Draughtsmanship
(2) Engineering Drawing
(3) Building Construction
(4) Civil Engineering materials
(5) Building Quantity

(3) SPECIAL ENGLISH CLASSES (3 months)
இலக்கணத்துடன் க. பொ. த. (சா/த) மற்றும் சகல பரீட்சைகளுக்கும் ஏற்ற வகையில் மிகக் குறுகிய காலப் பயிற்சி நெறிகள் நடைபெறும்;

(4) SHORT - HAND & TYPING (ENGLISH) — (தட்டெழுத்தும் சுருக்கெழுத்தும்)

(5) ELECTRICAL WIRING - மின்சார இணைப்பு — (3 மாதங்கள்)
(6) MOTOR MECHANISM - மோட்டார் வாகனம் திருத்துதல் - (6 மாதங்கள்)
(7) MOTOR WINDING - மோட்டர் வைன்டிங் — (4 மாதங்கள்)
(8) GENERAL ELECTRICIAN - (ஜெனரல் எலக்ரிசியன்) - (4 மாதங்கள்)

இதில் உள்ளடக்கப்பட்டுள்ள பாடத் திட்டங்கள்:

(1) அடிப்படை மின்சாரம் (AC / DC) — Basic Electricity
(2) மோட்டர்வைன்டிங் — Motor Winding
(3) ஆமச்சர் வைன்டிங் — Armature Winding
(4) டிரான்ஸ்போமர் வைன்டிங் — Transformer Winding
(5) வீட்டு மின் இணைப்பு — House Wiring
(6) எல்லாவிதமான மின்உபகரணங்களும் பழுது பார்த்தல், இயக்குதல் — Repairing of all type of Electrical Equipments

விண்ணப்பப் படிவங்களை அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்

மேலதிக விபரங்களுக்கு:

பதிவாளர்
பற்றீஸியன் இன்ஸ்ரிரியூட்ஸ்,
59, சென். பற்றிக்ஸ் வீதி,
யாழ்ப்பாணம்.

REGISTRAR,
Patrician Institutes of Higher Studies,
59, St. Patrick's Road,
Jaffna.

[எ-1609]

### எமது கோரிக்கைகள்

# எவரிடமும் பிச்சை கேட்பது போல இருக்கக்கூடாது

(யாழ்ப்பாணம்)

"நாம் எந்தக் கோரிக்கையையும் எவரிடமும் பிச்சை கேட்பது போல இருக்கக் கூடாது. உலகில் அமைந்துள்ள சட்டங்கள் விதிகளுக்கமைய கேட்க வேண்டும்" இவ்வாறு விடுதலைப்புலிகள் மக்கள் முன்னணிப் பிரமுகர் திரு. வே. பாலக்குமார் தெரிவித்தார்.

தமிழர் நலன்காக்கும் ஒன்றியத்தின் கூட்டத்தில் கலந்து கொண்டு பேசுகையிலே அவர் இவ்வாறு கூறினர்.

அவர் மேலும் அங்கு பேசுகையில் கூறியதாவது:

போராட்டத்துக்கு முன்பு உள்ள இயல்புநிலை மீண்டும் வர வேண்டும் என்று எண்ணுவது போராட்டத்தின் பலவீனமாகும்.

போராட்டம் என்பது பாதிப்புக்களை ஏற்படுத்தும் அந்தப் பாதிப்புக்களின் உள விளைவுகளே இன்னொரு போராட்டமாகும்.

விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியின் அரசியல் பொறுப்பாளர் மூர்த்தி பேசுகையில் கூறியதாவது: விடுதலைப் போராட்டத்துக்கு உலக அரசுகள் ஆதரவு தருவது குறைவு. ஆனால் பாதிக்கப்பட்ட மக்கள் ஒரு காரியத்தை செய்யும் போது நிச்சயம் அந்தக் கோரிக்கை வெல்லும் இதுவரை இந்த மக்கள் அமைப்புக்கள் தங்கள் பாதிப்புக்களும் பற்றிசொல்லவில்லை.

பயந்து பயந்து எங்களை அழிக்கிறோம். விடுதலைப் புலிகளோடு பேசுமாறு மேற்கத்தைய நாடுகள் அரசாங்கத்தை வற்புறுத்துகிறது. எங்களுக்கு நடந்த பிரச்சனைகளை வெளிநாடுகளுக்கு எடுத்துச் சொன்னால் எதிர்காலத் தீர்வுக்கு வழி காட்டலாக இருக்கும்.

எமது பாதிப்புக்களைப் பற்றி விபரத்தோடு சர்வதேச சமூகத்துக்கு சமர்ப்பிக்க வேண்டும்.

வெளிநாடுகள் நிவாரணத்துக்காக நிறையப்பணம் கொடுகிறது. அதைக்கூட ஸ்ரீலங்கா அரசு தாமதப்படுத்துகிறது.

---

## 4 ஏ பெற்ற மாணவனுக்கு ஐயாயிரம் ரூபா பரிசு

(யாழ்ப்பாணம்)

வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரியில் உயிரியல் விஞ்ஞானத்தில் நாலு 'ஏ' சித்திகளைப்பெற்ற கு. கஜாஹரன் என்ற மாணவனுக்கு. அதிபர் கலாநிதி எஸ் ஜெபநேசன் ரூபா 5,000 பரிசாகவழங்கினர்.

இக்கல்லூரியில் கணிதத்துறையில் ஒருவர் 3ஏபி பெற்றினையும், ஒருவர் 2ஏ சிஎஸ் என்ற பேற்றினையும், ஒருவர் ஏபிசிஎஸ் என்ற பேற்றினையும், ஒருவர் ஏ. 2சி. எஸ். என்ற பேற்றினையும், ஒருவர் ஏபி 2சி என்ற பேற்றினையும் பெற்றுள்ளனர்.

---

### மன்னார் மாவட்டத்தில்

## 1990-ற்கு பின் பிறந்த குழந்தைகளுக்கு பதிவில்லை

(மன்னார்)

1990ம் ஆண்டு ஜூன் மாதம் 14ம் திகதிக்கு பின்பு மன்னார் மாவட்டத்தில் பிறக்கும் குழந்தைகளுக்கு சரியான பதிவுகள் எதுவும் இல்லையென்றும் இப்பகுதிகளிலுள்ள வைத்தியசாலைகளில் பிறக்கும் குழந்தைகளும் எதுவித பதிவேடுகளிலும் பதிவுசெய்யப்படுவதில்லையென்றும் கிராமசேவையாளர்களிடமும் எந்தவிதமான பதிவுப் புத்தகங்களும் இல்லையென்றும் பொதுமக்கள் தெரிவித்துள்ளனர்.

இக்காலப் பகுதியில் பிறந்த தமது பிள்ளைகளுக்கு பிறப்புப் பத்திரத்தை எவ்வாறு பெற்றுக்கொள்வதென்று தெரியாது பெற்றோர் திண்டாடிவருவதாகவும் கூறப்படுகிறது. (வி)

---

### பொதுச்சேவை

## ஒய்வூதியத் திட்டத்தின் கீழ் மாகாணசபை ஊழியர்!

(கொழும்பு)

மாகாண சபைகளில் தற்போது கடமையாற்றும் ஊழியர்கள் அனைவரும் பொதுசேவைஒய்வூதியத் திட்டத்தின் கீழ் கொண்டு வரப்பட்டுள்ளனர்.

மேற்படி ஊழியர்களின் ஒய்வூதியத் திட்டம் அரசினால் அங்கீகரிக்கப்பட்டுள்ளது.

இதேநேரம் இலங்கையிலுள்ள உள்ளூராட்சிச் சபைகள் அனைத்தும் இவ்வருடம் டிசம்பர் மாதம் 31ம் திகதியுடன் கலைக்கப்படுமென்றும் இவற்றில் சேவையாற்றும் ஊழியர்கள் அனைவரும் மாகாண சபையின் கீழ் கொண்டு வரப்படுவார்கள் என்றும் தெரிவிக்கப்படுகிறது. (வி)

---

## காளைமாடு திருட்டு

(யாழ்ப்பாணம்)

கைதடி மேற்குப் பகுதியில் இரு காளைமாடுகள் அண்மையில் திருடப்பட்டுள்ளன.

இப்பகுதியைச் சேர்ந்த வேலுப்பிள்ளை, வ. சந்தையா ஆகியோரின் மாடுகளே திருட்டுப்போன மாடுகளாகும்.

இவர்களின் தோட்டத்தில் கட்டப்பட்டிருந்தபோதே இரவிரவாக இம்மாடுகள் திருடப்பட்டன.

---

## ஸ்ரீ பாஸ்கரன் விளையாட்டரங்கு

(யாழ்ப்பாணம்)

மல்லாகம் கிராம அபிவிருத்திச் சங்கத்தில் 38ஆவது வருடாந்த பொதுக்கூட்டத்தில் மல்லாகம் கிராம அபிவிருத்திச் சங்கத்தினால் 70 பரப்புக் காணியில் அமைக்கப்பெற்ற விளையாட்டு மைதானத்திற்கு "ஸ்ரீபாஸ்கரன் விளையாட்டரங்கு" என பெயரிடும் தீர்மானம் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.

மேலும் 70 பரப்புக்காணிகளை வாங்கவும் உத்தேசிக்கப்பட்டுள்ளது. இந்த அரங்கில் உதைபந்தாட்டம், கரப்பந்தாட்டம், கூடைப்பந்தாட்டம், கிரிக்கெட் ஆகியவற்றிற்கு தனித்தனியாக மைதானங்களை அமைத்தலுடன் நீச்சல் தடாகம், உடற்பயிற்சிக்கூடம், சிறுவர் பூங்கா, கலியாண மண்டபம், விருந்தினர் விடுதி ஆகியனவும் அமைக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

---

## இராசி பலன்

30-09-1991

திங்கட்கிழமை

தமிழுக்குபுரட்டாதி 14

ஸப்தமி மு. இ. 7-14 வரை. மிருகசீரிடம் மு. இ. 7-04 வரை, இராகுகாலம் காலை 7-32 முதல் 9-02 வரை, சுப நேரம் பகல் 12-02 முதல் 1-32 வரை, அமிர்தசித்தம்.

மேடம்: வேலைப்பழு, வியாதியர் ஆசி, பண வரவு.

இடபம்: குடும்பப்பகை, மனக்குறை, காரிய அலைச்சல்.

மிதுனம்: தொழில் லாபம், விருந்துபசாரம், பயணம்.

கடகம்: பயமிகுதி, தொழில் முடக்கம், தூரத்து உறவு.

சிங்கம்: மனமாற்றம், நண்பர் வருகை, பதவி உயர்வு.

கன்னி: மனக்களிப்பு, வாக்கு வன்மை, புதிய ஸ்தானம்.

துலாம்: பகைவர் தொல்லை, புத்திரர் செலவு, குடும்பப் பிரிவு.

விருச்சிகம்: வாதக் கோளாறு மனச் சஞ்சலம், யோசனை.

தனுசு: தொழில் பாராட்டு, மனக்களிப்பு, மாதா உதவி

மகரம்: பயணங்கள் அனுகூலம், தொழில் முதலீடு, புகழ்.

கும்பம்: காரிய விக்கினம், உடல் உபாதை, கடிதத் தொல்லை.

மீனம்: பெற்றோர் வாதம், வாக்குக் கலகம், கடன்கவலை.

ஜோஸ்யர்

---

# கடவுச்சீட்டு மோசடி யாழ் வாசிகள் கைது

(யாழ்ப்பாணம்)

கடவுச்சீட்டு மோசடி சம்பந்தமாக அண்மையில் கொழும்பு புறக்கோட்டையில் வைத்து பொலிஸாரால் கைது செய்யப்பட்ட இரு ஆண்களும், ஒரு பெண்ணும் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்தவர்கள் என்பது தற்போது தெரியவந்துள்ளது.

இவர்களிடமிருந்து பெருந்தொகையான மலேசிய, கனடிய பாஸ்போட்டுகளும், இங்கிலாந்து, கனடா, அமெரிக்கா போன்ற நாடுகளுக்குச் செல்லக்கூடிய 130 போலி விஸா 'ஸ்ரிக்கர்களும்' பொலிஸார் கைப்பற்றினர்கள். (வி)

---

### வீட்டுக்காரர் யாழ். நகர் செல்ல

## கொள்ளைக் கோஷ்டியினர் வீட்டுக்குள் சென்றனர்

(புங்குடுதீவு)

புங்குடுதீவு 7ம் வட்டாரத்திலுள்ள வீடொன்றில் கடந்த வாரம் இனந்தெரியாத நபர்களினால் பத்தாயிரம் ரூபா பெறுமதியான பொருட்கள் கொள்ளையடிக்கப்பட்டுள்ளன.

மேற்படி வீட்டின் கதவுகள் யாவும் திறப்புபோட்டு திறந்து பல பெறுமதியான பொருட்கள் கொள்ளையடித்துச்செல்லப்பட்டுள்ளது.

வீட்டிலிருந்த குடியிருப்பாளர் யாழ்ப்பாணம் சென்றிருந்த சமயம் பார்த்து இக்கொள்ளை சம்பவம் நடந்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. உடுபிடவைகள், வீட்டுத்தளபாடங்கள் மற்றும் இலவர் பொருட்கள் கொள்ளையடித்துச் செல்லப்பட்டுள்ளது.

புங்குடுதீவு 8ம் வட்டாரத்திலுள்ள திருமதி க. பராசக்தி என்பவரின் வீட்டிலேயே இக்கொள்ளைச்சம்பவம் இடம் பெற்றுள்ளது.

---

## குட்டுத்துவக்கு வெடித்து பெண் காயம்

(சாவகச்சேரி)

வேட்டைக்கென தயார் செய்யப்பட்ட கட்டுத்துவக்கு தவறுதலாக வெடித்ததால் இளம் குடும்பப்பெண் படுகாயமடைந்த நிலையில் சாவகச்சேரி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு பின் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைக்கு எடுத்துச்செல்லப்பட்டார்.

நான்கு பிள்ளைகளின் தாயான சி. மங்கைசெல்வம் (வயது 32) என்பவரே காயமடைந்தவராவார். இச்சம்பவம் மீசாலை தெற்கில் இடம் பெற்றுள்ளது.

---

### சி-நோர் ஊழியர்

## பதினன்கு மாத கால சம்பளம் பெற முயற்சி

(கொழும்புத்துறை)

யாழ். மாவட்டத்தில்சிநோர் ஸ்தாபன சகல ஊழியர்களுக்கும் கடந்த வருடம் ஆகஸ்ட் மாதத்திலிருந்து இதுவரை 14 மாதங்களாக சம்பளம் எதுவும் வழங்கப்படவில்லையென்று தெரிவிக்கப்படுகிறது.

மேற்படி ஊழியர்கள் தமது சம்பளத்தைப்பெறுவது சம்பந்தமாக யாழ். பிராந்திய சிநோர் ஸ்தாபன முகாமையாளருடாக கொழும்பிலுள்ள மேலிடத்துடன் கடந்த மாதம் தொடர்புகொண்டும் எதுவித பலனும் கிடைக்கவில்லையென்று கூறப்படுகிறது.

தற்சமயம் சிநோர் ஊழியர்களின் 14 மாதங்களுக்குரிய வேதனத்தைப் பெற்றுத்தரும்படி, கொழும்பிலுள்ள சிநோர் தொழிற்சங்கத் தலைமைக் காரியாலயத்துடன் யாழ். சிநோர் கிளைச் சங்கத்தினர் தொடர்புகொண்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. [154]

---

## வித்துக்கள் தேவை

(யாழ்ப்பாணம்)

எண்ணெய் வித்துக்கள் நியாயமான விலைப்படி கொள்வனவு செய்யப்பட உள்ளது. இவ் வித்துக்கள் சேகரிக்கக் கூடியோர் தமிழீழ ஆய்வு நிறுவனத்துடனோ அல்லது உற்பத்திக்குழுக்களிடமோ கொடுத்து அதற்கான பணத்தைப்பெற்றுக்கொள்ளலாம். இவற்றுள் ஆமணக்கு, வேம்பு, இலுப்பை, என்னுப் போன்றவையும் அடங்கும்.

---

## கல்லூரிகளுக்கான விஞ்ஞானபோட்டி

(யாழ்ப்பாணம்)

இம்மாதம் 28ம் திகதி நடைபெறவிருந்த யாழ்ப்பாண விஞ்ஞானச் சங்கம் நடாத்தும் கல்லூரிகளுக்கான விஞ்ஞான வினா விடைப் போட்டியும், விஞ்ஞானப் பேச்சுப் போட்டியும் அக்டோபர் 1-ம் திகதி 9-00 மணிக்கு யாழ்ப்பாணம் இந்து மகளிர் பாடசாலையில் நடைபெறும் என்பதாக அறிவிக்கப்படுகிறது.

---

## குடிநீருக்கு தட்டுப்பாடு

(சாவகச்சேரி)

சாவகச்சேரி கல்வயல் பகுதியில் குடிதண்ணீருக்கு பெரிதும் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது; இப்பகுதியிலுள்ள கிணறுகளில் நீர் உவர்ப்பாக மாறியுள்ளதால் இந்நிலை ஏற்பட்டுள்ளதாக இப்பகுதி மக்கள் கவலை தெரிவித்தனர்;

இதனால் ஒருமைல் தூரத்திற்கு சென்றே குடிநீர் எடுத்து வருவதாகவும் தெரிவித்தனர்.

---

## பொருட்கள் சகாய விலையில் விற்பனை

(பண்டத்தரிப்பு)

பண்டத்தரிப்பு பல நோக்கு கூட்டுறவுச் சங்கம், கொழும்பிலிருந்து சங்க லொறிகள் மூலம் தருவிக்கப்பட்ட தேங்காய் எண்ணெயையும் மற்றும் பல சரக்கு சாமான்களையும் பங்கீட்டு அட்டைக்கு சங்கத்தின் கிளைகள் ஊடாக சகாய விலையில் வழங்கி வருகின்றது. (72)

# ஜனநாயக முறைக்கு ஜனாதிபதி ஆட்சி ஏற்றதல்ல!

-- விமலரட்ண தேரோ

(கொழும்பு)

நிறைவேற்று அதிகார முடைய ஜனாதிபதி முறையை மாற்றியமைத்து மீண்டும் பழைய 'வெஸ்ட் மினிஸ்ரர்' நாடாளுமன்ற முறையையே தான் ஆதரிப்பதாக ஸ்ரீ ஜயவர்த்தன புரபல்கலைக்கழக சிரேஷ்ட விரிவுரையாளர் பெல்லன்வல விமலரத்ன தேரோ நேற்று பி. பி. ஸி. க்கு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் கூறியதாவது;

தற்போதைய அரசியல் நிலைமை குறித்துத் தமது கருத்துக்களைச் சுதந்திரமாக வெளியிடப் பொதுமக்கள் அனுமதிக்கப்படவேண்டும்.

நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறை அப்பதவி வகிப்பவரின் அதிகாரத்தைக் கூட்டுகிறது. இது உண்மையான ஜனநாயகம் அல்ல என்றும் அவர் தெரிவித்தார். [153]

# போதனாசிரியர்களுக்கு பற்றாக்குறை

(யாழ்ப்பாணம்)

யாழ். தாதிகள் பயிற்சி பாடசாலையில் தாதிகள் போதனாசிரியர்கள் பற்றாக் குறை நிலவுகிறது.

கடந்த பல வருடங்களாக இந்த பதவிகளுக்கான வெற்றிடங்கள் நிரப்பப்படாமல் இருக்கிறது. பயிற்சி பெறும் தாதிகள் இதனால் பெருமளவில் பாதிக்கப்படுவதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (153)

## ஆயுதங்கள் வெடிமருந்துகளைத் தேடி

# தமிழ்நாடு மாநிலத்தில் பெரும் தேடுதல் வேட்டை

(சென்னை)

தமிழ்ப் போராளிகளினால் மறைத்து வைக்கப்பட்டிருக்கும் ஆயுதங்கள் மற்றும் வெடிமருந்துகளை மீட்கும் பொருட்டு தமிழகத்தில் மிகப்பெரியதேடுதல் வேட்டை நடத்தப்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது;

மூன்று கடற்படைத் தொகுதியின் உதவியுடன் தமிழ்நாடு மாநில காவல் துறையைச் சேர்ந்த ஆயிரம் பொலிஸார் இந்தப் பணியில் அமர்த்தப்பட்டுள்ளனர்.

இதேவேளை நாகபட்டினத்திலிருந்து கோடிக்கரை வரையான முழுப்பிரதேசமும், தஞ்சாவூர் தொடக்கம் இராமேஸ்வரம் பகுதியும் அதி முக்கிய பாதுகாப்பு பகுதியாக தமிழக அரசினால் பிரகடனம் செய்யப்பட்டுள்ளதாக தமிழக பொலிஸ் இன்ஸ்பெக்டர் ஜெனரல் தேவாரம் தெரிவித்தார்.

## அம்பாறை

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

படையினர் பாரிய அளவில் தேடுதல் வேட்டை நடத்தியதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை கஞ்சிக்குடியாறு பகுதியில் அண்மையில் விமானத் தாக்குதல்கள் இடம் பெற்றதாகவும் கூறப்படுகின்றது. (மா)

## பேச்சுவார்த்தைக்கு

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

னுடன் பேச்சுவார்த்தைநடத்துவதற்கு விடுதலைப் புலிகள் மூன்று நிபந்தனைகளை முன் வைத்துள்ளதாக 'சண்டே ஒப்சேவர்' பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது.

தமிழ் மக்கள் தேசிய இனமாக அங்கீகரிக்கப்படவேண்டும், தமிழருக்கு பாரம்பரிய தாயக பூமி இருப்பது அங்கீகரிக்கப்படவேண்டும், தன்னாட்சி உரிமையும் அங்கீகரிக்கப்படவேண்டும் என்ற நிபந்தனைகளே முன்வைக்கப் பட்டிருப்பதாக ஒப்சேவர் தெரிவித்துள்ளது;

## வடக்கு

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

ளுக்கு எதிராக தாக்குதல் நடவடிக்கை நிறுத்தப்படவில்லையென இராணுவத் தளபதி மேஜர் ஜெனரல் ஹமில்டன் வணசிங்க அறிவித்திருப்பதும் குறிப்பிடத்தக்கது. (மா)

## மணலாறில்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

போது போர் நிறுத்தம் எதுவும் இல்லையென அந்த இராணுவ அதிகாரி தெரிவித்தார். மணலாறு பகுதியில் மேலும் தாக்குதல் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுமா எனக் கேட்டதற்கு அங்கு தாக்குதல் நடவடிக்கை எதுவும் மேலும் மேற்கொள்ளப்படா தெனவும் அவர் தெரிவித்தார்;

## சர்வதேச ஆசிரியர் தினம்

(யாழ்ப்பாணம்)

இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம், சர்வதேச ஆசிரியர் தினத்தை எதிர்வரும் 4-ம் திகதி வெள்ளிக்கிழமை காலை 11 மணிக்கு யாழ். இந்துக்கல்லூரி மண்டபத்தில் கொண்டாட ஏற்பாடு செய்துள்ளது.

இவ்விழாவில் கலந்துகொள்ளும் பொருட்டு யாழ் மாவட்டத்தைச் சேர்ந்த சகல ஆசிரியர்களுக்கும் அரைநாள் லீவு வழங்கப்பட வேண்டுமென்ற இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத்தின் கோரிக்கையை வடமாநில கல்விப்பணிப்பாளர் திரு இரா. சுந்தரலிங்கம் ஏற்றுக்கொண்டுள்ளதாக சங்கத்தின் பொதுச்செயலாளர் திரு த மகாசிவம் தெரிவித்துள்ளார்.

இவ்விழாவில் பல முக்கிய பிரமுகர்கள் கலந்துகொண்டு உரையாற்ற இருப்பதோடு கலை நிகழ்ச்சிகளும் நடைபெற ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளது.

## ஜனாதிபதி

(1ம் பக்கத் தொடர்ச்சி)

கூட ஒருவரை ஒருவர் சந்திக்கும்போது இந்தப் பிரேரணை பற்றியே பொது மக்கள் கூடாக விவாதித்து வருகிறார்கள்.

இலங்கைக்கு நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி ஆட்சி முறையா அல்லது வெஸ்ட்மினிஸ்டர் முறையிலான நாடாளுமன்ற ஆட்சி அமைப்பா தேவை என்று சகல தரப்பு மக்களும் தமக்குள் அபிப்பிராயங்களைப் பரிமாறிக்கொள்வதாகவும் தெரிவிக்கப்படுகிறது. [153]

# பஞ்சாப் தேர்தல்

(சண்டிகார்)

பஞ்சாப் தேர்தல் பெப்ரவரி 15இன் பின் எக்காரணம் கொண்டும் ஒத்திவைக்கப்பட மாட்டாது என இந்திய உள்துறை அமைச்சர் எஸ். பி. சவான் திட்டவட்டமாகத் தெரிவித்துள்ளார்.

பி. ரி. ஐ. செய்தி ஸ்தாபனத்துக்குப் பேட்டியளிக்கையிலேயே மேற்கண்ட தகவலை அவர் வெளியிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் காஷ்மீரில் பொறுப்பற்ற நிலையிலும் தளர்வு நிலையிலும் தீவிரவாதிகள் உள்ளதாக தமக்கு தகவல் கிடைத்துள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார். (க)

## நாய்கள் தொல்லை

(சாவகச்சேரி)

சாவகச்சேரிப் பகுதியில் கட்டாக்காலி நாய்களின் தொல்லை அதிகரித்து வருகின்றது;

## தளர்வு

(1ம் பக்கத் தொடர்ச்சி)

மாகத் தெரிவித்துள்ளபோதிலும், அந்தப் பகுதிகளில் கடந்த மூன்று நாட்களாகத் தாக்குதல் சம்பவம் எதுவும் இடம்பெறவில்லையென இராணுவ அதிகாரி ஒருவர் கொழும்பில் தெரிவித்ததாக இந்திய வானொலி நேற்று அறிவித்தது.

இதேவேளையில் கிழக்கு மாகாணத்தில் சில பகுதிகளில் விமானப்படையினரின் குண்டுவீச்சு சம்பவங்களும் விடுதலைப் புலிகளுக்கும் ஸ்ரீ லங்கா குழுக்களுக்கும் இடையில் மோதல் சம்பவங்களும் இடம் பெற்றதாக இலங்கை அரசதரப்பு செய்திகள் தெரிவித்துள்ளன. (க)

## படகு மூழ்கடிப்பு

(கொழும்பு)

கொக்கிளாய் கடற்பகுதியில் நேற்று முன்தினம் படகு ஒன்று படையினரால் மூழ்கடிக்கப்பட்டதாகப் பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்தன.

படகில் பயணஞ்செய்தவர்கள் பற்றிய விபரம் எதுவும் தெரிவிக்கப்படவில்லை.

## கட்டுப்பாட்டு விலையில் பொருள்கள்

(சாவகச்சேரி)

விற்பனைத் திணைக்களத்தின் சாவகச்சேரிக் கிளையில் கட்டுப்பாட்டு விலையில் அத்தியாவசிய உணவுப் பொருள்கள் வழங்கப்படுகின்றன.

## வேண்டுகோள்

(யாழ்ப்பாணம்)

சிறுவர் பராமரிப்பு இல்லங்களை நடாத்தும் ஸ்தாபனங்கள் அவற்றின் விபரங்களை முறைப்படி தயாரித்து செயலாளர், ஆலய பரிபாலன சபை வண்ணை சிவன் கோவில் யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு அனுப்புமாறு கேட்டுக் கொள்ளபடுகின்றனர்

## மின்னல் தாக்குதல் வீடியோ காட்சி

(கொழும்பு)

மணலாறு காட்டுப் பகுதியில் நடைபெற்றுவரும் மின்னல் தாக்குதல் நடவடிக்கை பற்றிய வீடியோ படக்காட்சி நேற்று முன்தினம் கொழும்பு பத்திரிகையாளர்களுக்கு காண்பிக்கப்பட்டது.

12 நிமிடங்களைக் கொண்டதாக இந்த வீடியோக்காட்சி தயாரிக்கப்பட்டிருந்தது.

## இலங்கை

1-ம் பக்கத் தொடர்ச்சி)

பி. பி. ஸி. யின் கொழும்பு முகவர் கிறிஸ் மொறிஸ் 'இலங்கைக் கடிதம்' என்ற தலைப்பில் பி. பி. ஸி. க்கு எழுதியுள்ள கடிதத்தில் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

## விசேட பரீட்சை நடத்த ஏற்பாடு

(கொழும்பு)

வடபகுதியில் கடந்த வருட டிசம்பரில் நடாத்தப்படாதிருந்த (க. பொ. த) சாதாரண பரீட்சையை இவ்வருட டிசம்பர் மாதத்தில் நடாத்துவதற்கு ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக பரீட்சை ஆணையாளர் தெரிவித்துள்ளார். (க)

## முஸ்லிம் கிராமங்களுக்கு பாதுகாப்பு

(கொழும்பு)

கிழக்கு மாகாணத்திலுள்ள முஸ்லிம் கிராமங்களுக்கு பாதுகாப்பு வழங்க நடவடிக்கை எடுக்குமாறு ஜனாதிபதி பிரேமதாஸா பாதுகாப்பு அமைச்சு செயலாளருக்கு உத்தரவிட்டுள்ளார்.

இந்த பாதுகாப்பு ஏற்பாடுகள் ஒருவாரத்திற்குள் பூர்த்தி செய்யப்படவேண்டும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

## புலிகள்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

ஒன்றை நடத்தினர்.

வவுனியா ஸ்ரீலங்காப் படை முகாமுக்கும், நொச்சிமோட்டைப் பாலத்திற்கும் இடையில் மேற்படி தாக்குதலை விடுதலைப் புலிகள் மேற்கொண்டனர்.

விடுதலைப் புலிகளின் தாக்குதலை அடுத்து. சமூக விரோதக் கும்பல் நிலைகுலைந்துள்ளதாகவும், பல ஆயுதங்கள் விடுதலைப் புலிகளால் மீட்கப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டது.

வவுனியா செல்லும் தமிழ் மக்களைத் துன்புறுத்தியும், பலரை மர்மமான முறையில் கொலை செய்துவந்ததையும் அடுத்தே இத்தாக்குதல் நடவடிக்கையை விடுதலைப் புலிகள் மேற்கொண்டதாகத் தெரிவிக்கப்படுகிறது. (க)

## 95 மாணவர்கள் சித்தி

(வட்டுக்கோட்டை)

அண்மையில் வெளியான க. பொ. த. உயர்தர பரீட்சைப் பெறுபேறுகளின்படி வட்டுக்கோட்டை இந்துக் கல்லூரி [84.1] எண்பத்துநான்கு விதமான சித்தியையும் அதிகமான சிறந்த சித்திகளையும் பெற்று முன்னணி வகித்துள்ளது.

இக்கல்லூரியிலிருந்து தோற்றிய 113 மாணவர்களில் 95 பேர் சித்தியடைந்தனர். இவர்களில் 50 மாணவர்கள் பல்கலைக்கழக அனுமதிக்குத் தகுதிபெற்றிருப்பது குறிப்பிடத்தக்கது. [139]

## மரண அறிவித்தல்

### M. கென்ரா ஏபிரகாம்

காலஞ்சென்ற L. T. ஏபிரகாம், அக்னெஸ் ஏபிரகாம் தம்பதிகளின் புதல்வன் M. கென்ரா ஏபிரகாம் இறைவனடி சேர்ந்துவிட்டார். அன்னாரின் பூதவுடல் 30-9-91 திங்கட்கிழமை மாலை 4 மணிக்கு யாழ்ப்பாணம் கடற்கரை வீதி, 671-ம் இலக்க இல்லத்தில் இருந்து நல்லடக்கத்திற்காக பரிசுத்த தொஞ்சேஞ்சி மாதாவின் சேமக்காலைக்கு எடுத்துச் செல்லப்படும்;

தகவல்:
A. L. ஏபிரகாம்,

671, கடற்கரை வீதி,
யாழ்ப்பாணம்.

[சி-5421]

இப் பத்திரிகை "ஈழநாடு" லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேற்கு வீதி 68-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1991-ம் ஆண்டு செப்டெம்பர் 30-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Regestered as a News Paper at the General Postoffice Lanka under License Number B/10336/81;